**செய்தி வெளியீடு எண்: 148** **நாள்: 28.02.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (28.2.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 14 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்காகவும், நெசவாளர்களின் வாழ்வு மேன்மையுறவும், விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் 4 இணை விலையில்லா சீருடை வழங்கும் திட்டம், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம், நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் திட்டம், கைத்தறி நெசவாளர்கள் ஆயுள் காப்பீடு திட்டம், நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம், மாநில அளவில் சிறந்த நெசவாளர் விருது வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மேற்படி கைத்தறி மற்றும் நெசவாளர் நலத் திட்டப் பணிகளை செவ்வனே செயல்படுத்தும் பொருட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் காலியாக உள்ள உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 14 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று உதவி இயக்குநர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் திரு. ஓ.எஸ்.மணியன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி,இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு ச.முனியநாதன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 28.2.2018